SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# THIRD YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL)-2011/2012

HELD IN NOVEMBER / DECEMBER-2013

## GGY 3.11 Water Pollution and Management

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கும் மாத்திரம் விடையளிக்குக

நேரம் : 03 மணித்தியாலங்கள்

### பகுதி – I – நீர் வளம்

01. அ. உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் நீர்ப்பாவணையால் நீரின் குணவியல்புகள் இழக்கப்படுகின்றன, உதாரணங்களுடன் விளக்குக. (07 புள்ளிகள்)

ஆ. உலகில் நீருக்கான வழங்கலும் நீருக்கான கேள்வியும் தொடர்பில் எதிர் நோக்குகின்ற சாதக, பாதக நிலைமைகளை ஆராய்க. (08 புள்ளிகள்)

இ. நீரியல் வட்டத்தில் ஏற்படும் சமனின்மை உலக நீர்ச்சமநிலையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதனைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

02. அ. தரை நீர் வளம் என்றால் என்ன? (03 புள்ளிகள்)

ஆ. ஏதாவதொரு பிரதேசத்தின் தரைநீர் வளத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான வழி முறைகளை பொருத்தமான விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (09 புள்ளிகள்)

இ. கழுவு நீரோட்டம் அதிகரிக்கின்ற போது தரைநீர் நீர்ப்பீடத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தினை விளக்குக. (08 புள்ளிகள்)

03. அ. இலங்கையில் தரைநீர் வளம் தொடர்பாக உமது கருத்தினை முன்வைக்குக. (06 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் புறவுருவப்படம் ஒன்றினை வரைந்து அதில் தரைநீர் வலயங்களைக் குறித்தக் காட்டுக. (07 புள்ளிகள்)

இ. நீர் குறிப்பிட்டவற்றுள் ஏதாவது ஒரு வலயத்தினைத் தெரிவு செய்து விமர்சிக்குக. (07 புள்ளிகள்)

### பகுதி II – நீர் மாசாக்கம்

04. அ. உலகின் ஏதாவது பிரதேசத்தினைத் தெரிவு செய்து தரைநீரின் தரத்திலும், அளவிலும் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

மறுபக்கம் பார்க்க…………

ஆ. “தரைநீர் மாசடைவதற்கு செறிவான நீர் பயன்பாடே காரணமாகும்” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (08 புள்ளிகள்)

இ. எதிர்காலத்தில் தரைநீர் வளம் மாசடைவதனால் எதிர்நோக்குகின்ற சவால்களினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

05. அ. கிராம – நகர பிரதேசங்களில் நீர் மாசாக்கியை ஏற்படுத்துகின்ற காரணிகளை விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ. விருத்தியடைந்து வரும் கைத்தொழில் நடவடிக்கைகள் தரைநீரில் ஏற்படுத்தும் தாக்கத்தினை முன்வைக்குக. (06 புள்ளிகள்)

இ. செறிவான விவசாய நடவடிக்கைகள் தரைநீரை மாசுபடுத்தும் விதம் பற்றி விளக்குக. (06 புள்ளிகள்)

06. அ. அசுத்தமான நீரின் பண்புகளை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ஆ. கிராமங்களில் உள்ள கிணறுகள் மூலம் பெறப்படும் குடி நீரினால் மக்கள் பல்வேறு சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் - விளக்குக. (07 புள்ளிகள்)

இ. கடற்கரையோரங்களுக்கு அண்மையில் அமைந்திருக்கும் கிணறுகள் வரட்சிக் காலங்களில் அதிகமான உவர்தன்மை அடைகின்றன. இதற்கான காரணத்தினை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி III - நீர் முகாமைத்துவம்

07. அ. ஏதாவதொரு பிரதேசத்தினைத் தெரிவு செய்து அங்கு காணப்படும் தரைக்கீழ் நீரினைப் பரிசோதனை செய்வதற்கு எவ்வாறான உத்திகளைப் பயன்படுத்துவீர் என்பதனை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

ஆ. தரைக்கீழ் நீரின் இரசாயன பண்புகளை அடையாளம் காண்பதற்கு எவ்வாறான மாதிரிகளை சேகரித்தல் வேண்டும் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

08. அ. இலங்கையில் நீர் வளத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. கிராம மக்களின் நீர் பயன்பாட்டிற்கும் நகர மக்களின் நீர் பயன்பாட்டிற்கும் பொருத்தமான சிறந்ததொரு நீர் முகாமைத்துவ திட்டத்தை முன்வைக்குக. (10 புள்ளிகள்)